# அக்டோபர் – 12 – வியாழன்

புனித வில்பிரட்

**நற்பேறு பெற்றவர் யார்? - அவர் பொல்லாரின் சொல்லின் படி நடவாதவர்: பாவிகளின் தீயவழி நில்லாதலர்: இகழ்வாரின் குழுவினில் அமராதவர்: திபா. 1:1**

## முதல் வாசகம் : மலாக்கி 3 : 13 - 20

"எனக்கு எதிராக நீங்கள் கடுஞ்சொற்களை உதிர்த்து வந்தீர்கள், "என்கிறார் ஆண்டவர். ஆயினும், "உமக்கு எதிராக என்ன பேசினோம்? என்று கேட்கிறீர்கள். கடவுளுக்கு ஊழியம் செய்வது வீண் அவரது திருமுறைகளைக் கடைப்பிடித்து ஒழுகுவதாலும் படைகளின் ஆண்டவர் திருமுன் மனம் வருந்தி நடந்து கொள்வதாலும் நமக்கு என்ன பயன்? இனிமேல் நாங்கள் "ஆணவக்காரரே பேறுபெற்றோர்" என்போம். கொடியோர் தழைத்தோங்குவது மட்டுமல்ல, கடவுளை அவர்கள் சோதித்துப் பார்த்தாலும், தப்பித்துக் கொள்ளுகிறார்கள் என்றெல்லாம் நீங்கள் கூறவில்லையா?" அப்போது, ஆண்டவருக்கு அஞ்சி நடந்தோர் ஒருவரோடு ஒருவர் உரையாடிக்கொண்டனர். ஆண்டவரும் உன்னிப்பாகக் கேட்டார். ஆண்டவருக்கு அஞ்சி நடந்து அவரது பெயரை நினைந்து வாழ்வோருக்கென நினைவு நூல் ஒன்று அவர் திருமுன் எழுதப்பட்டது. "நான் செயலாற்றும் அந்நாளில் அவர்கள் எனது தனிப்பெரும் சொத்தாக இருப்பார்கள்" என்கிறார் படைகளின் ஆண்டவர். ஒரு தந்தை தமக்குப் பணிவிடை செய்யும் மகன்மீது கருணை காட்டுவதுபோல் நான் அவர்கள் மீது கருணை காட்டுவேன். அப்போது நீங்கள் நேர்மையாளர்க்கும் கொடியோர்க்கும், கடவுளுக்கு ஊழியம் செய்வோர்க்கும் அவருக்கு ஊழியம் செய்யாதோர்க்கும் உள்ள வேற்றுமையை மீண்டும் கண்டுகொள்வீர்கள்"என்றார்.

**பதில்பாடல்** : ஆண்டவர் மீது நம்பிக்கை கொண்டவரே பேறு பெற்றோர்

## நற்செய்தி : லூக்கா 11 : 5 - 13

அக்காலத்தில் ,யேசு சீடர்களை நோக்கிப் பின்வருமாறு கூறினார் "உங்களுள் ஒருவர் தம் நண்பரிடம் நள்ளிரவில் சென்று, "நண்பா, மூன்று அப்பங்களை எனக்குக் கடனாகக் கொடு. என்னுடைய நண்பர் ஒருவர் பயணம் செய்யும் வழியில் என்னிடம் வந்திருக்கிறார். அவருக்குக் கொடுக்க என்னிடம் ஒன்றுமில்லை" என்று சொல்வதாக வைத்துக் கொள்வோம். உள்ளே இருப்பவர், "எனக்குத் தொல்லை கொடுக்காதே ஏற்கெனவே கதவு பூட்டியாயிற்று என் பிள்ளைகளும் என்னோடு படுத்திருக்கிறார்கள். நான் எழுந்திருந்து உனக்குத் தர முடியாது" என்பார். எனினும் அவர் விடாப்பிடியாய்க் கதவைத் தட்டிக் கொண்டேயிருந்தால் அவர் தம் நண்பர் என்பதற்காக எழுந்து கொடுக்காவிட்டாலும், அவரது தொல்லையின் பொருட்டாவது எழுந்து அவருக்குத் தேவையானதைக் கொடுப்பார் என நான் உங்களுக்குச் சொல்கிறேன். "மேலும் நான் உங்களுக்குச் சொல்கிறேன் கேளுங்கள், உங்களுக்குக் கொடுக்கப்படும் தேடுங்கள், நீங்கள் கண்டடைவீர்கள் தட்டுங்கள் உங்களுக்குத் திறக்கப்படும். ஏனெனில் கேட்போர் எல்லாரும் பெற்றுக்கொள்கின்றனர் தேடுவோர் கண்டடைகின்றனர் தட்டுவோருக்குத் திறக்கப்படும். பிள்ளை மீனைக் கேட்டால் உங்களுள் எந்தத் தந்தையாவது மீனுக்குப் பதிலாகப் பாம்பைக் கொடுப்பாரா? முட்டையைக் கேட்டால் அவர் தேளைக் கொடுப்பாரா? தீயோர்களாகிய நீங்களே உங்கள் பிள்ளைகளுக்கு நற்கொடைகள் அளிக்க அறிந்திருக்கிறீர்கள். அப்படியானால் விண்ணகத் தந்தை தம்மிடம் கேட்போருக்குத் தூய ஆவியைக் கொடுப்பது எத்துணை உறுதி!"என்றார்.

**தியானம்:** கடவுள் நல்லவர், இரக்கமுள்ளவர், பரிவுள்ளவர். மனிதருக்கு எல்லையில்லா நன்மைகளை செய்ய வல்லவராய் இருக்கிறார். கடவுளை அடைய வேண்டிய வழி என்ன என்று சிந்தித்து பார்க்கும் போது செபம் என்ற ஆயுதம் இருந்தால் தான் நமது விண்ணப்பங்கள் கடவுள் பாதம் போய் சேரும். கடவுளையும் மனிதனையும் இணைக்கும் சக்தி செபத்திற்கு உண்டு. செபத்தினால் நாம் எதைப் பெற்றுக்கொண்டோம் என்று நம்புகின்றோமோ அதை நாங்கள் பெறுவது உறுதி. எமது செபம் உறுதியாக கிடைக்கும் என்ற நம்பிக்கையில் கேட்டால் நிட்சயம் கிடைக்கும். ஆனால் எமது தேவைகள் பல வருடங்களாக கேட்டும் கிடைக்கா விட்டால் நாம் சோர்ந்து கடவுள் இருக்கின்றாரா என்ற உணர்வில் நம்பிக்கையற்றவர்களாகி விடுகின்றோம். நாம் செபத்தில் நிலைத்திருந்து தொடர்ந்து அவரது சக்தியை ஒவ்வொருநாளும் நம்பிக்கையில் நிலைத்து தூய ஆவியின் வல்லமையுடன், பிறர் தேவைகளயும் நிறைவடையச் செய்ய நாமும் தினமும் செபித்து இறைவனிடம் தொடர்ந்து வேண்டுவோம்.